கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

திட்டக்குடி.

**OS.144/2016 DW: 4 03.03.2026**

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 03 நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய ராமசந்திரன் என்பவரின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டின் 10-வது விதியின் ஏற்பாட்டின்படி செல்வி.N.ஷாலினி,B.Com.L.L.B.(Hons.) ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமசந்திரன் | வயது | 66 |
| த/க. பெயர் | சிங்காரம் | தொழில் | விவசாயம் |
| வட்டம் | திட்டக்குடி | கிராமம் | டி.ஏந்தல் |
| மாவட்டம் | கடலூர் | | |

**முதல் விசாரணை**

எனக்கு பூர்வீகம் டி. ஏந்தல். எனது முன்னோர்கள் காலத்திலிருந்தே அந்த ஊரில் தான் வசித்து வருகிறேன். வாதி சிவசாமியை எனக்கு தெரியும். வாதியின் தகப்பனார் எனக்கு பெரியப்பா முறை, வாதி எனக்கு அண்ணன் முறை. வாதியும் அதே ஊரில் தான் வசித்து வருகிறார். 1 வது பிரதிவாதி கிரையம் பெற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 1 வது பிரதிவாதி எனக்கு என்ன முறை என்றால் எனது மனைவியின் அக்கா. 1ம் பிரதிவாதிக்கும், வாதிக்கும் என்ன உறவு முறை என்றால் மாமா உறவு முறை. ராணியினுடைய தகப்பனார் தங்கவேல், சிவசாமிக்கு மாமா. 1 வது பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் டி.ஏந்தலில் தான் உள்ளது. அந்த சொத்தை ராணி யாரிடம் இருந்து கிரையம் பெற்றார் என்றால் சாமிக்கண்ணு படையாட்சி மற்றும் அவரின் மகன் பரமசிவம் மற்றும் மைனர் அண்ணாமலை அவர்களிடம் இருந்த கிரையம் பெற்றார். 1987 ல்கிரையம் பெற்றார். அந்த பத்திரம் திட்டக்குடி சார்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டது. அந்த பத்திரத்தின் ஆவண எழுத்தர் கலியபெருமாள். அந்த பத்திரத்தை எழுதியபோது நானும் அங்கு தான் இருந்தேன். அதில் யாரெல்லாம் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் சிவசாமி முதல் சாட்சி, நாராயணசாமி இரண்டாவது சாட்சி. மேற்படி இரண்டு சாட்சிகளும் தற்போது உயிருடன் உள்ளார்களா என்றால் சிவசாமி மட்டும் தான் உயிருடன் உள்ளார். நாராயணசாமி இறந்து விட்டார். சிவசாமியை என்னார் அடையாளம் காட்ட முடியும். சிவசாமி இந்த நீதிமன்றத்தில் தற்போது ஆஜராகி உள்ளார். சொத்து கிரையம் பேசும்போது நான் உடன் தான் இருந்தேன். யாரெல்லாம் கிரையம் பேசினோம் என்றால் எனது மாமனார் தங்கவேல் படையாட்சி, சிவசாமி, ராணியின் கணவர் பன்னீர் செல்வம் மற்றும் நானும் உடன் இருந்தேன். கிரையம் பேசிய பிறகு, பணம் கைமாற்றிய பிறகு, பத்திரம்

பதிவு செய்யப்பட்டது. பத்திரம் பதிவு செய்யப்பட்ட சொத்திற்கு பக்கத்தில் எனது சொத்து உள்ளதா என்றால் இல்லை. எனது மாமனார் தங்கவேல் படையாட்சிக்கு அங்கு சொத்து உள்ளது. கிரைய சொத்திற்கு பக்கத்தில் தென்புறத்திலும், மேற்புறத்திலும் சிவசாமிக்கு சொத்து உள்ளது. சொத்து கிரையம் பெறுவதற்கு முன்பு சொத்து அளக்கப்பட்டது. சொத்தை அளக்கும்போது யாரெல்லாம் உடன் இருந்தார்கள் என்றால் எனது மாமனார் தங்கவேல் படையாட்சி, சிவசாமி, ராணியின் கணவர் பன்னீர் செல்வம் மற்றும் நானும் உடன் இருந்தேன். சாமிக்கண்ணும் உடன் இருந்தார். அளக்கும்போது யாரும் பிரச்சனை செய்யவில்லை. பத்திரம் பதிவு செய்யப்பட்ட பின்பு ராணி பெயருக்கு பட்டா மாறிய விவரம் எனக்கு தெரியும். இந்த வழக்கு 2016 ம் வருடத்தில் தாக்கல் செய்யப்பட்டது. சுமார் 29 வருடங்கள் பிறகு பிரச்சனை உள்ளது என்று சொல்கிறார்கள். ராணிக்கும், சிவசாமிக்கும் என்ன பிரச்சினை என்றால் அளக்கும்போது 9 செண்ட் ராணிக்கு கூடுதலாக இருந்தது. ராணி சொத்தில் 9 செண்ட் சிவசாமி சேர்த்து பயிர் செய்தார்கள். சர்வேயர் வைத்து அளக்கப்பட்டது. சர்வேயர் வைத்த அளந்தபோது ராணிக்கு சேர வேண்டிய 9 செண்ட்டை தர முடியாது என்று சிவசாமி பிரச்சனை செய்தார். 9 செண்ட் தரமுடியாது என்று சொல்லிவிட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். ராணிக்கு கிரையம் படியும், பட்டா படியும் தனது இடத்தை கேட்கிறார். சிவசாமி ராணி இடத்தை தர முடியாது என்று சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கில் என்னை 2வது பிரதிவாதியாக சேர்த்துள்ளார். 8 வருடம் என்னை இந்த வழக்கில் இருந்து நீக்கிவிட்டனர். இந்த வழக்கு கோரிக்கை தவறானது என்றால் சரிதான். ராணி பத்திரத்தின் படி அவர் இடத்தை 3ம் பிரதிவாதி தியாகராஜனுக்கு 2017 ல் கிரையம் கொடுத்தார். வாதி கிரையப்பத்திரத்தில் சாட்சி கையெழுத்து போட்டும் உடன் இருந்தார் என்றால் சரிதான். 1987 ல் கிரையம் கொடுக்கும்போதும் இடம் அளக்கப்பட்டது அப்போதும் வாதி சிவசாமி உடன் இருந்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

வாதிக்கு குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.

குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

**Typed to my dictation in the open Court as per the statement of the witness, read over to the witness and admitted by him/her to be correct.**

N SHALINI

Digitally signed by N SHALINI
Date: 2026.03.03 16:54:13 +0530

Additional District Munsif,
Tittagudi.